பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

05 10 2025 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- ஆரோக்கியமான பெண்கள், வலிமையான குடும்பம் இயக்கம், மக்கள் பங்கேற்பிற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- விவசாயிகள் நலனில் மத்திய அரசு ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளாது என்று வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.
- மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் இதுவரை இரண்டரை கோடி பேர் பயன் அடைந்துள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.
- தமிழகத்தில் மக்களின் நம்பிக்கையை திமுக அரசு இழந்து விட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.
- உலக கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஆரோக்கியமான பெண்கள் - வலிமையான குடும்பம் இயக்கம், மக்கள் பங்கேற்புக்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜெ.பி. நட்டாவின் சமூக வலைதள பதிவை பகிர்ந்துள்ள பிரதமர், இந்த இயக்கத்தின்கீழ் 6 கோடியே 50 லட்சம் மகளிருக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதற்கு மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

மகளிர் சக்தியை மேம்படுத்தவும், இந்த இயக்கத்தை பயனுள்ளதாகவும் மாற்ற பாடுபட்ட அனைவருக்கும் தமது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாக திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

**<<<<>>>>**

விவசாயிகள் நலனில் மத்திய அரசு ஒருபோதும் சமரசம் செய்துகொள்ளாது என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

பட்னாவில் விவசாயிகள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகளிடையே உரையாற்றிய அவர், உணவு தானியங்களின் உற்பத்தியில் இந்தியா குறிப்பிடத்தக்க

முன்னேற்றத்தை அடைந்துள்ளதுடன், பிற நாடுகளுக்கு அவற்றை ஏற்றுமதி செய்து வருவதாக கூறினார்.

விவசாயிகளின் கடும் உழைப்பும், விஞ்ஞானிகள் பங்களிப்பும் இதற்கு காரணம் என்று அவர் தெரிவித்தார்.

வேளாண் வளர்ச்சியில் பின்தங்கிய 100 மாவட்டங்களில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக அவர் கூறினார்.

இத்திட்டத்திற்காக மத்திய அரசின் 11 துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட உள்ளதாகவும், இத்திட்டம் அந்த மாவட்டங்களில் வேளாண் வளர்ச்சியை மேம்படுத்தும் என்றும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

<<<<>>>>

வள்ளலாரின் 202வது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனை ஒட்டி தமிழகம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆளுநர் மாளிகையில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கலந்துகொண்டு திருவருட்பா தொடர்பான நூல் ஒன்றை வெளியிடுகிறார்.

வடலூரில் நடைபெறும் நிகழ்ச்சியில் மாநில அமைச்சர்கள் திரு. சேகர் பாபு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சி.வி. கணேசன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இதனிடையே ஆளுநர் மாளிகையில் சமரச சுத்த சன்மார்க்க இளைஞர்கள் சங்கத்தின் சார்பில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, வள்ளலாரின் போதனைகள் குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

பல்கலைக்கழகங்களில் அவரது பெயரில் இருக்கைகள் அமைக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

சுதந்திரத்திற்கு முன்பு அந்நியர்களின் ஆட்சிக் காலத்தில் நமது பாரம்பரியத்தை நிலைநாட்ட வள்ளலார் முக்கிய பணிகளை ஆற்றியதாக அவர் கூறியுள்ளார்.

வறுமை, சுற்றுச்சூழல் பாதிப்பு, போர் ஆகிய முக்கிய பிரச்சினைகளுக்கான தீர்வு வள்ளலாரின் போதனைகளில் உள்ளது என்று திரு. ஆர்.என். ரவி தெரிவித்தார்.

<<<<>>>>

“மக்களைத் தேடி மருத்துவம்” திட்டத்தின்கீழ் தமிழகத்தில் இதுவரை இரண்டரை கோடி பேர் பயன்பெற்றுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை குரோம்பேட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் தொடர்ந்து சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

<<<<>>>>

சேலத்தில் உள்ள மூக்கனேரி மற்றும் போடிநாயக்கன்பட்டி ஏரிப் பகுதிகளை சுற்றுலா மையமாக மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த ஏரிகளில் சீரமைப்புப் பணிகளை நேற்று அவர் ஆய்வு செய்தார்.

இந்த இரண்டு ஏரிகளிலும் சீரமைப்புப் பணிகள் இம்மாத இறுதிக்குள் நிறைவடைந்து பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்று அமைச்சர் திரு. ராஜேந்திரன் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் மக்களின் நம்பிக்கையை திமுக அரசு இழந்து விட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூட்டணி தொடர்பான மாயத் தோற்றத்தை திமுக ஏற்படுத்தியுள்ளதாகவும், ஆனால் தேர்தலில் அதை மக்கள் முறியடிப்பார்கள் என்று கூறினார்.

இதனிடையே சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தூய்மைப் பணியாளர்கள் நலனில் திமுக அரசு அக்கறை செலுத்தவில்லை என்று குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னை கொளத்தூரில் தூய்மைப் பணியாளர் ஒருவர் விஷவாயு தாக்கி உயிரிழந்திருப்பது அதிர்ச்சியளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

தூய்மைப் பணியாளரின் பாதுகாப்பை மேம்படுத்த பாதுகாப்பு கவசங்களை தமிழக அரசு வாங்காதது ஏன் என திரு. நயினார் நாகேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், திருச்சி, திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

வேலூர், திருப்பத்தூர் மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் அடுத்த சில மணி நேரங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் உள்ளிட்ட மாவட்டங்களில் நேற்று பரவலாக மழை பெய்ததாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கனமழை காரணமாக திருப்பத்தூர் மாவட்டம் ஜலகம்பாறை நீர்வீழ்ச்சியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் அங்கு பொதுமக்கள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக வனத்துறை கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைனில் பயணிகள் ரயில் மீது ரஷ்யா நடத்திய தாக்குதலில் 30 பேர் காயம் அடைந்ததாக யுக்ரைன் அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஜப்பானின் சில இடங்களில் இன்று அதிகாலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 6ஆகப் பதிவானது.

<<<<>>>>

கௌடில்யா பொருளாதார மாநாட்டில் வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் இன்று நிறைவுரையாற்றவுள்ளார்.

<<<<>>>>

வடக்கு கோவாவில் இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமை சார்பில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின் உற்பத்தி நிலையத்தை மத்திய மின்துறை இணையமைச்சர் திரு ஸ்ரீபத் நாயக் திறந்து வைத்தார்.

<<<<>>>>

அரசுப் பள்ளிகளில் பத்தாம் வகுப்புப் படிக்கும் மாணவர்களின் தனித்திறனை ஊக்குவித்து உதவித் தொகை வழங்குவதற்காக நடத்தப்படும் தேர்வுகள் தொடர்பான கையேட்டை மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி வெளியிட்டார்.

<<<<>>>>

மதுரையில் புதிய கோ ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை மாநில கைத்தறித் துறை அமைச்சர் திரு காந்தி திறந்து வைத்தார்.

<<<<>>>>

காஞ்சிபுரத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

பெரம்பலூரில் வன விலங்கு வார விழாவையொட்டி பள்ளி,கல்லூரி மாணவ மாணவிகளுக்கு கட்டுரை, பேச்சு மற்றும் ஓவியப்போட்டிகள் நடத்தப்பட்டன.

<<<<>>>>

திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்தில் சனி பிரதோஷத்தை முன்னிட்டு நடைபெற்ற வழிபாட்டில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று வழிபாடு மேற்கொண்டனர்.

<<<<>>>>

சென்னை தண்டையார்பேட்டையில் மாநகராட்சி சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மேயர் திருமதி பிரியா ஆய்வு செய்தார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

கொழும்பில் இப்போட்டி மாலை 3 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

Al Ain மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் M.R. Arjun - Amsakarunan இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 20-22, 21-14, 21-14 என்ற செட் கணக்கில் சிங்கப்பூரின் Eng Koh - Junsuke Kubo இணையை வென்றது.

<<<<>>>>

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவில் தக்ஷினேஷ்வர் சுரேஷ் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>